**புதுக்குடியிருப்பு பிரதேசசபை**
**முல்லைத்தீவு மாவட்டம்**

------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 18 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 10 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 மே 05 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக்கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 பெறப்படவேண்டிய வேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) அரசிறைக்கடனாளிகள் கணக்கில் காட்டப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 11,682,016 பெறுமதியான 05 வகையான அரசிறைகளினை கடந்த 1 தொடக்கம் 5 ஆண்டுகளாக அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 120,414 தொகை பெறுமதியான தேசத்தை கட்டி எழுப்பும் வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்காமல் வைப்புக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

---

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) 1988 (பிரதேச சபைகள் நிதி, நிர்வாக) ஒழுங்கு விதிகள் | |
| (i) அத்தியாயம் III விதி 24 | பிரதேச சபை ஸ்தாபிக்கப்பட்டு மூன்று வருடங்களுக்குள் பிரதேச சபைக்குரித்தான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III விதி 33 | சோலை வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் V விதி 140 | தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்களின் கூட்டு மொத்தம் ரூபா 424,367 தொடர்பில் கடந்த 04 தொடக்கம் 05 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) அத்தியாயம் IX விதி 180 | காசு களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பாயிருக்கும் அலுவலர்களிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 10 ஒக்டோபர் 1990 ஆம் திகதிய சுற்று நிருப இல 41/90 | சபையின் 13 வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 பெறுகை வழிகாட்டி கைநூல் பிரிவு 5.4.12 | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) சபையினால் செலுத்தப்பட்டபின்னர் அதன் விபரங்கள் அடுத்து வரும் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கும் அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் இலக்கம் 571. | 02 வருடத்திற்கு மேற்பட்ட மூன்று வகையான காலம் கடந்த வைப்புக்களின் கூட்டு மொத்தம் ரூபா 2,172,135 தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிப் பகுப்பாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 டிசம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 31,827,810 ஆக விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 20,046,620 ஆகவும் விளைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதிவிளைவுகள் ரூபா 11,781,190 ஆல் அதிகரித்திருந்தமையைக் காட்டுகிறது. மீண்டுவரும் மானியங்கள் மற்றும் மீண்டுவரும் வருமானங்கள் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு இதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 நிதிசார் பகுப்பு ரீதியான விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா. 69,811 விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக ரூபா 77,931 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 8,120 ஆல் குறைவடைந்துள்ளமையை காட்டுகின்றது.

### 2.3 நிதி மீளாய்வு

#### 2.3.1 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா. 59,007,059 ஆக விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா. 39,206,303 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா. 19,800,756 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.4 வருமான முகாமைத்துவம்

#### 2.4.1 வீதவரிகள்

1988 (பிரதேச சபைகள் நிதி, நிர்வாக) ஒழுங்கு விதியின் அத்தியாயம் III இனது பிரிவு 32 இன் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டுக்கான ஆதன வரி மதிப்பீடு தொடர்பான மதிப்பீட்டுப்பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

#### 2.4.2 தொலைத்தொடர்பு கோபுரத்துக்கான கட்டணங்கள்

17 ஏப்ரல் 2009 திகதியிடப்பட்ட 1597/8 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்டிருந்த 11 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கல், பூர்வாங்கத்திட்டமிடல் அனுமதி, இசைவுச்சான்றிதழின் வழங்குகைகள், மேவுதல் அங்கீகாரம் ஆகிய நான்கு வகையான கட்டணங்களை அறவீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவுமில்லை.

**2.4.3 முத்திரைக் கட்டணங்கள்**

-------------------------------

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்டிருந்திருக்க வேண்டிய சபைக்குரிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,112,726 இனை கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக அறவீடு செய்ய சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

--------------------------

**3.1 முகாமைத்துவ திறமையின்மை**

---------------------------------------

கீழ்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) உளளூராட்சி உதவி ஆணையாளரால் சபைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டடிருந்த 24 வாகனங்களினை சபைக்குரியதாக உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்க நாளது வரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அவை 05 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக சபையால் பயன்படுத்தப்படுகின்றன.

(ஆ) சபையின் 19 ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

-------------------------------------

நிதி ஒழுங்கு விதி இல 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையினது அறிக்கையும் நிதி ஒழுங்குவிதி 757 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

**3.3 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

---------------------------------------

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட ரூபா 40,762,500 பெறுமதியான 17 மூலதன வேலைத்திட்டங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது இதற்குரிய காரணங்களும் கணக்காய்வுக்கு அறியத்தரப்பட்டிருக்கவில்லை.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

-----------------------

நிதி திட்டமிடல் அமைச்சின் 05/01/2012 திகதியிட்ட 1/2012 இலக்க சுற்றுநிருபத்திற்கு முரணாக சபையின் பெறுகைக்குழுவின் பரிந்துறைகளின்றி சனசமூக அமைப்புக்களுக்கு நேரடியாக ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. அச்சனசமூக அமைப்புக்களின் தேவையான மட்டத்தில் நிதி வளங்களை கொண்டிருக்கவில்லை. அவ் வேலைகளின் செயன்முன்னேற்ற அறிக்கைகள் கோரப்பட்டிருந்தும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 செயற்றிட்ட தாமதங்கள்**

-----------------------------

மீளாய்வாண்டில் முன்னெடுக்கப்பட்டிருந்த 07 செயற்திட்டங்களின் கூட்டுமொத்த பெறுமதி ரூபா 3,646,325 இற்கான வேலைகள் மீளாய்வாண்டு இறுதி வரை நிறைவேற்றப்பட்டிராது சில்லறைக்கடன்கொடுத்தோர் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்குகளில் செலவினமாக காட்டப்பட்டிந்தமையும் அவதானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரை இத்தகைய வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏவையும் மேற்கோள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.6 திண்மக்கழிவு முகாமைத்துவம்.**

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகளை மட்டுமே சபையால் மேற்கொள்வதேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்கள் சபையினால் முன்னெடுக்கப்பட்டிருக்கப்படவில்லை.

**4. கணக்களிபொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட்டிராமையும் மதிப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையாலேயுமே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 4,000 தொடக்கம் ரூபா 14,456,482 வரையான வேறுபாடுகளும் மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 41,939 தொடக்கம் ரூபா 2,394,652 வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டிருந்தன.

**4.2 பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டினது சபைக்குரிய பெறுகைத்திட்டம், மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பன 2006 ம் ஆண்டு பெறுகை வழிகாட்டி கைநூலின் பிரிவு 4.2 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

பிரதேச சபையின் உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டமையால் உள்ளகக் கட்டுப்பாட்டுக்கள் உரிய முறையில் செயற்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**4.4 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டம்**

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் 09.06.2009ம் திகதிய கணக்காய்வு முகாமைத்துச் சுற்றுநிருப இல DMA/2009 (1) ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் செற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டில் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்திருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான கூட்டமெதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் மீது விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) வருமான சேகரிப்பு

(ii) நிலையான சொத்துக்கள்

(iii) கணக்கீடு

(iv) ஆளணி

(v) வாகனங்களின் பயன்படுத்துகை

(vi) நானாவித வைப்புக்கள்

(vii) பாதீட்டுக்கட்டுப்பாடு

(viii) பெறுகை நடைமுறை